# கடலூர் பெருநகராட்சி

2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 30–ம் நாள் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்க்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 30.11.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருட்கள்*

| | |
|---|---|
| 1) | கடலூர் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய சீருடைகள் வழங்கிட தோராய செலவினம் ரூ.10,00,000/– க்கு நிர்வாக அனுமதியுடன், அரசு நிறுவனங்களில் சீருடை துணிகள் வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பட்டுள்ள விலைப்புள்ளிகளின் நிறுவனங்களின் சீருடைகள் துணிகள் தரம் குறித்து துப்புரவு ஆய்வரின் குறிப்பு கோரப்பட்டது. துப்புரவு ஆய்வர் தூய்மைப் பணியாளர்களின் சங்க நிர்வாகிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் தரமான சீருடைத் துணிகள் 10 ஆண்டுகளாக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் நிறுவனத்தில் வாங்கப்படுவதாகவும், தற்போதும் தமிழ்நாடு காதி கிராமத் தொழில் நிறுவனத்தில்சீருடைகள் வாங்கிட விருப்பம் தெரிவித்துள்ளதாக வழங்கிய குறிப்பின் பேரில், தமிழ்நாடு காதிகிராமத் தொழில் நிறுவனத்திற்கு சீருடைத் துணிகள் வழங்கிட அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். (6549/ 19/ எச் 1) |
| 2) | கடலூர் பெருநகராட்சி 2018–19ம் ஆண்டுக்குரிய தணிக்கைக் கட்டணம் ரூ.613081/–ஐ செலுத்த 2018–19ம் ஆண்டு பொது நிதி தணிக்கை அறிக்கையில் பத்தி எண் 132ல் ஊதியம் மற்றும் இதர படிகளின் உண்மை செலவினத்தில் 50 சதவீதம் தணிக்கை கட்டணமாக ரூ.613081/–ஐ அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 3) | கடலூர் பெருநகராட்சியில் 45 வார்டுகளில் கொரோனா வைரஸ் தொற்று அதிக அளவில் பரவி வருவதால், 09.09.2020 அன்று நடைபெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சென்னை அவர்களின் காணொளி மூலம் வழங்கப்பட்ட அறிவுரையின்படியும், துணை இயக்குநர், சுகாதார பணிகள் கடலூர்அவர்களின் அறிவுறுத்தப்பட்டவாறும், ஆணையர் அவர்கள் |

உத்தரவின்படி தற்போது கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில் தீவிர பரிசோதனை மேற்கொள்ள அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களை COVID 19 SWAP TESTக்கு உட்படுத்த மருத்துவ வசதி கொண்ட மூன்று வாகனங்களை தொற்றின் எண்ணிக்கை குறையும் வரை கடலூர் ஓ.டி.பகுதிகள், திருப்பாதிரிப்புலியூர் பகுதிகள் மற்றும் மஞ்சக்குப்பம் (ம) புதுப்பாளையம் பகுதிகளுக்கு தினசரி நாள் வாடகை வீதம் அவசர மருத்துவ பணிகள் மேற்கொள்ளும் நிறுவனங்கள் மூலம் பெற்று பயன்படுத்திட தகுதியான நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது. அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள் 1920 பிரிவு 15ன்கீழ் அதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த அன்பு ஆம்புலன்ஸ் சர்வீஸ், கடலூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கும், செப்டம்பர் 2020 மற்றும் அக்டோபர் 2020 ஆகிய இரு மாதங்களுக்கான டீசல் மற்றும் ஆம்புலன்ஸ் வாடகை தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள, செலவினத் தொகை ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். (7082/2020/எச் 2)

4) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் அங்கன்வாடி மையங்களை தரம் உயர்த்துதல் மற்றும் பழுது நீக்குதல் பணிகளுக்கு கடலூர் நகராட்சிக்கு பின்வரும் பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பரிந்துரை செய்யப்பட்ட பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புதுப்பாளையம் மசூதி தெரு அங்கன்வாடி மையத்தில் பழுது நீக்கம் செய்தல் | 2.00 |
| 2 | புதுப்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளி அங்கன்வாடி மையத்தில் பழுது நீக்கம் செய்தல் | 2.00 |
| 3 | கொடிக்கால்குப்பம் அங்கன்வாடி மையத்தில் பழுது நீக்கம் செய்தல் | 2.00 |
| | மொத்தம் | 6.00 |

மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 3 பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. அ3/2466/20 நாள் 02.1.2020ல் நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்/ ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

5) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 7 எண்ணிக்கை அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறை மற்றும் பள்ளி வளாகங்களை சுத்தப்படுத்தும் பணிக்கு 16 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் பணி அமர்த்திடும்பணி ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு 12.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்பவருக்கு 18.03.2020 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அனைத்து பள்ளிகளும் 22.03.2020 முதல் மூடப்பட்டதால், மேற்படி பணியினை ஒப்பந்ததாரரால் மேற்கொள்ள இயலவில்லை. தற்போது பள்ளிகள் திறக்கும் காலத்தில் இருந்து ஒரு வருட காலத்திற்கு அதே விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்பவர் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 6) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 22 எண்ணிக்கை நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் உள்ள கழிப்பறை மற்றும் பள்ளி வளாகங்களை சுத்தப்படுத்தும் பணிக்கு 22 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் பணி அமர்த்திடும் பணி ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு 12.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்பவருக்கு 18.03.2020 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அனைத்து பள்ளிகளும் 22.03.2020 முதல் மூடப்பட்டதால், மேற்படி பணியினை ஒப்பந்ததாரரால் மேற்கொள்ள இயலவில்லை. தற்போது பள்ளிகள் திறக்கும் காலத்தில் இருந்து ஒரு வருட காலத்திற்கு அதே விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்பவர் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 7) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 28 குத்தூசி குருசாமி சாலை, கதவு எண் 147, 147/2 மற்றும் 147/3ல் உள்ள கடைகளுக்கு (சொத்துவரி எண்கள் 093/228622, 093/228623 மற்றும் 093/228624) சொத்து வரி நிர்ணயம் செய்ததை ஆட்சேபித்து திரு.எஸ்.சிவக்குமார் என்பவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூரில் வழக்கு எண் LA No. 123-/2020 in O.S.No.137/2020 ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>மேற்கண்ட வழக்கில் கடலூர் நகராட்சி சார்பாக திரு.எஸ்.சச்சிதானந்தம், M.A.M.L. நகராட்சி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், வழக்கிற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். ( 8877/ 2020/ அ1) |
| 8) | கடலூர் பெருநகராட்சி 27.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியில் 45 வார்டுகள் அடங்கியுள்ளது. 2011–ம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 173636 மக்கள் தொகை கொண்ட இந்நகாட்சியில் 40614 குடியிருப்புகளும் 6090 வணிக நிறுவனங்களும் உள்ளன.<br><br>இந்நகராட்சிக்கு உட்பட்ட 45 வார்டுகளில் தினந்தோறும் 33 மெட்ரிக். டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. இந்நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.3) அரசாணை (நிலை) எண். 101, நாள்.30.04.1997–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் அளவு கோலின்படி 712 தூய்மைப்பணியாளர்கள் தேவைப்படுகிறது. கடலூர் பெருநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட தூய்மைப்பணியாளர்கள் பணியிடங்கள் 456 ஆகும். இதில் தற்போது 236 நிரந்தரத் தூய்மைப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்த வருகின்றனர். எனவே, அரசாணையின்படி நிர்ணயிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை இல்லாததால் தூய்மைப் பணியினை சரிவர செய்ய இயலாத நிலையில், சுகாதாரப்பணி மிகவும் பாதிப்பு ஏற்பட்டதால், தனியார் மூலம் 107 தூய்மைப்பணியாளர்கள் துப்புரவு பணியில் ஈடுபடுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.25580/P3/2015, நாள் 07.01.2016 எண்ணிட்ட செயல்முறையின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.<br>மேலும், தினசரி சேகரமாகும் குப்பைகளை அகற்றி வசந்தராயன்பாளையத்தில் அமைத்துள்ள நவீன உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லவும், குப்பைகள் உருவாகும் |

இடத்திலேயே மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என்று தரம் பிரித்து மறுசுழற்சி செய்யவும், நகரின் அனைத்து வார்டுகளிலும் தினந்தோறும் சேரும் குப்பைகள் உடனுக்குடன் அகற்றவும், டெங்கு காய்ச்சல் மூலமாக தொற்று பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ள சிரமமாக உள்ளதாலும், பருவமழை காரணமாக நகரில் தேங்கியுள்ள கழிவுநீர் மற்றும் குப்பைகளை பொதுமக்களின் புகார்களுக்கு இடமின்றி அகற்ற வேண்டியுள்ளதாலும், 343 தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு அகற்ற இயலாததால், பொது சுகாதாரத்தினை பேனிட அவசர அவசியம் கருதி, 11.10.2018ம் தேதி நடைபெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் (கடலூர் முகாம்) ஆய்வுக்கூட்டத்தின் போது, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் அறிவுரை வழங்கப்பட்டதின் பேரில், ஏற்கனவே ஒப்பந்தம் கோரப்பட்டுள்ள எஸ்.வி.டி.கன்ரக்ஷன் நிறுவனம் மூலம் கூடுதலாக 50 தூய்மைப்பணியாளர்களை பணியமர்த்தி 28.02.2019 வரை ஈடுபடுத்திக்கொள்ள தெரிவிக்கப்பட்டதின் பேரில், பார்வை 4–ல் காணும் இந்நகர் மன்றம் தீர்மானம் எண்.319 நாள் 22.10.2018–ம் தேதியில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதின்படி, தனியார் நிறுவனமான M/s.S.V.T. நிறுவனம் மூலம் கடலூர் பெருநகராட்சியில் 157 தூய்மைப் பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்கள் நிர்ணயித்துள்ள அளவுகோல்படி, தினக்கூலி ரூ.305/– அடிப்படையில் தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3)துறை, அரசாணை (நிலை) எண்.101, நாள் 30/04/1997–ன் படி, கடலூர் பெருநகராட்சியில் துப்புரவுப் பணி மேற்கொள்ள வேண்டிய தூய்மைப்பணியாளர்கள் 49513/250=198 குடியிருப்புகள் (198 குடியிருப்புக்கு 3 பேர் வீதம்) 594 நபர்கள் தேவைப்படும் நிலையில், தற்போதுள்ள நிரந்தப்பணியாளர்கள் 212 மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 157 தூய்மைப் பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 369 தூய்மைப்பணியாளர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொது சுகாதாரப்பிரிவில் உள்ள வாகனங்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்கள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி தேவைப்படுகின்றன.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 4 பெரிய லாரிக்கு 4 பேர் வீதம் (4*4)=16 | 16 |
| 2 | 3 டிராக்டருக்கு 3 பேர் வீதம் | 9 |
| 3 | 12 டாட்டா ஏசி வாகனத்திற்கு 3 பேர் வீதம் | 36 |
| 4 | 2 காம்பேக்டர் வாகனத்திற்கு 2 பேர் வீதம் | 4 |
| 5 | பாபு கலையரங்கம், வசந்தராயன் பாளையம், குண்டுசாலை ஆகிய 3 உரக்கிடங்கிடங்குக்கு 4 பேர் வீதம் (4*3)= 12 பணியாளார்கள் மற்றும் பசுமை உரக்குடில்கள் 10–க்கும் 3 பேர் வீதம் (10*3)=30 பணியாளர்கள் ஆக (12+30)=42 பணியாளர்கள். | 42 |
| 6 | மத்திய பேருந்து நிலையம் பராமரிப்பு பணிக்கு 4 பணியாளரும் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய 2 பேர் வீதம் (2*2)=4 பணியாளர்கள் | 8 |
| 7 | 3 நாளங்காடிகள் (அண்ணா நாளங்காடி, பான்பரி நாளங்காடி மற்றும் பக்தவச்சலம் நாளங்காடி) | 3 |
| | மொத்தம் | 118 |

**தினசரி பராமரிக்கப்படும் சாலையின் தூரத்தின் அடிப்படையில் :–**

| தூய்மைப்பணியாளர்கள் கணக்கீடு | குடியிருப்பு விகிதம் | சாலையில் பரப்பளவு விகிதம் | தற்போது பணிபுரியும் தூய்மைப்பணியாளர்கள் | தேவைப்படும் தூய்மைப் பணியாளர்கள் (2–4) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| குடியிருப்புகள் 49513/250 =198 (198 குடியிருப்புகு 3 நபர் வீதம்) | 594 | – | – | – |
| 45 வார்டுகளில் உள்ள சாலைகள் 320கி.மீ/3கி.மீ–க்கு 3 நபர் வீதம் (320/3*3) | – | 320 | – | – |
| வாகனங்கள் மற்றும் நாளங்காடிகள், பேருந்து நிலைய பகுதிகள் தூய்மைப்பணிகள் மேற்கொள்ள | 118 | 118 | – | – |
| தற்போது பணிபுரியும் பணியாளாகள் | – | – | 212 | – |
| கூடுதல் | 712 | 438 | 212 | 500 |

மேற்கண்ட கணக்கீட்டின்படி கடலூர் பெருநகராட்சியில் 712 தூய்மைப் பணியாளர்கள் தேவைப்படும் நிலையில், 212 நிரந்தர தூய்மைப்பணியாளர் போக, 500 தூய்மைப் பணியார்கள் தேவைப்படும் நிலையில், 200 தூய்மைப்பணியளார்கள் மட்டும் தற்காலிகமாக தனியார் நிறுவனம் மூலம் பணி அமர்த்திக்கொள்வதற்கு ஆகும் உத்தேசச் செலவு விபரத்தினை கீழ்க்கண்ட அட்டவணையின்படி தயார் செய்யப்பட்டுள்ளது.

**நிரந்தர துப்புரவுப் பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டால் நகராட்சிக்கு ஏற்படும் செலவின விவரம்–**

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஒரு நபருக்கு ரூ.15700+1413+700+300+200=18313/– வீதம் 200 நபர்களுக்கு ரூ. 36,62,600/– 12 மாதங்களுக்கு ரூ.3662600x 12 | 4,39,51,200/– |
| 2 | 200 நபர்களுக்கு ஈட்டிய விடுபு ஒப்படைப்பு தொகை (15700+1413+700/2) 8906.50 (அ) ரூ.8907/– (ரூ.8907 x 200) | 17,81,400/– |
| 3 | 200 நபர்களுக்கு சீருடை மற்றும் தையற்கூலி உட்பட (200 x 2800 ) | 5,60,000/– |
| 4 | 200 நபர்களுக்கு காலனி (200x250) | 50,000/– |
| 5 | பாதுகாப்பு உபகரணங்கள் (200 x 3741) | 7,48,200/– |
| | மொத்தம் | 4,70,90,800/– |

சுய உதவி குழுக்கள் (அ) ஒப்பந்தம் அடிப்படையின்படி மனித சக்தியை பெற்று (Manpower) தூய்மைப்பணி மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை கணக்கிடுதல் (Out Sourcing of Manpower from SHG). மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களால் **2019–2020**ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள புதிய தினக்கூலி ரூ.395/– அடிப்படையில், 200 தூய்மைப் பணியாளர்களுக்கான கூலி கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | | Per Month | Per Year |
|---|---|---|---|---|
| 1 | ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்படவேண்டிய பணியாளர்கள் 200 Nos | – | | – |
| 2 | மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி விவரப்படி (Market Rate) (2019–20) ஒரு நபருக்கு ஒரு 1 மாதத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகை (1 No x 30 Days x 395/–) | – | Rs 11,850/– | – |
| 3 | 200 நபர்களுக்கான மாத சம்பளம் ( 200 x 11,850) | – | Rs.23,70,000 | 2,84,40,000.00 |
| 4 | ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு (ESI 4.75ரூ) | – | Rs.1,12,575 | Rs 13,50,900 |
| 5 | EPF ( 12.00%) | – | Rs 2,84,400 | Rs 34,12,800 |
| 6 | Administrative charge 5 % of | – | Rs 1,18,500 | Rs 14,22,000 |
| 7 | GST ( 12.00%) | | | 0 |
| 8 | LIC (per head 1200/ - per annuam) | – | | Rs .2,40,000 |
| 9 | Safety Equipments (per head Rs.3741 per annuam ) | – | | Rs 7,48,200 |
| 10 | Uniform (Rs.2000 per head per annuam) | – | | Rs 4,00,000 |
| | Total Per Annuam | | | Rs. 75,73,000 |

| | |
|---|---|
| ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்படவேண்டிய பணியாளர்கள் வ.எண்.3 x 12 மாதங்களுக்கான சம்பளம் (12 x 23,70,000 ) | 2,84,40,000/– |
| ESI , EPF, Administrative charge,LIC, Safety Equipments, Uniform Per Annuam (Sl.No.5,6,8,9 and 10) | 75,73,000/– |
| Total | 3,60,13,000/– |

| ஒப்பு நோக்குப்பட்டியல் | ரூபாய் |
|---|---|
| 200 தூய்மைப்பணியாளர்களைக் நகராட்சி மூலம் நிரந்தரப் பணியாளராக பணிநியமனம் செய்யப்பட்டால் 1 வருடத்திற்கு ஆகும் செலவுத் தொகை. | 4,70,90,800/– |
| மேற்கண்ட பணியினை சுய உதவிக்குழுக்கள்/தனியார் ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொண்டால் 1 வருடத்திற்கு ஆகும் செலவுத் தொகை. ரூ.3,60,13,000/– + ரூ.1,87,000/– | 3,62,00,000/– |
| சேமிப்புத்தொகை | ரூ.1,08,90,800/– |

எனவே கடலூர் பெருநகராட்சியில் உள்ள 45 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் திறம்பட செயல்படுத்தவும், வீடு, வீடாக குப்பைகளை சேகரித்தல் மற்றும் நுண்உர மையங்களில், இயற்கை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளவும், 200 தூய்மைப் பணியாளர்களை 3 வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில், தனியார் நிறுவனம் மூலம் தூய்மைப்பணியில் ஈடுபடுத்திக்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிப் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி , பணியில் ஈடுபடுத்திட ரூ.362.00 லட்சம் செலவினத்தையும், ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவிலும் பணித்திறன் ஆய்வின் மூலம் ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரருக்கு, ஒப்பந்தத் தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தம் புதுப்பிக்கவும் மற்றும் கூடுதல் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுறது.

| | |
|---|---|
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாளிலிருந்து முதல் ஒரு வருடக்காலத்திற்கு உத்தேசச் செலவினத்தொகை ரூ.362.00 லட்சத்தினை நகராட்சி வருவாய் நிதி அல்லது அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.<br>3. ஒப்பந்தம் செய்யும் நாளிலிருந்து ஓராண்டு முடியும் போது பணித்திறன் ஆய்வு செய்து ஒப்பந்தத்தொகை 5 சதவிகிதம் உயர்வு செய்து, மன்ற ஒப்புதலுடன் ஒப்பந்தம் புதுப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். |
| 9) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட தங்கராஜ் மணிவிழா மண்டபம், வண்ணாரப்பாளையம் மற்றும் மாரியம்மன் கோயில் படிப்பகம் ஆகியவற்றிற்கு பொதுமக்கள் படிப்பதற்காகவும், மேலும் நகராட்சி அலுவலகத்திற்கும், திரு.முருகு பாண்டியன், நியூஸ் பேப்பர் ஏஜெண்ட், கடலூர் என்பவரின் மூலம் செய்தித் தாள்கள் வாங்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட செய்தித் தாள்களுக்கு ஏற்கனவே தொகை வழங்கப்பட்டது. நீங்கலாக தற்போது அக்டோபர் 2018 முதல் செப்டம்பர் 2020 முடிய உள்ள காலத்திற்கு விநியோகம் செய்தமைக்கான தொகை ரூ.70428/– வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ.70428/–ஐ திரு.முருகுபாண்டியன், நியூஸ் பேப்பர் ஏஜெண்ட், கடலூர் அவர்களுக்கு வழங்கவும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்பபடுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். (7850/ 2016/ இ2) |
| 10) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட தேவனாம்பட்டினம் பகுதியில் செயல்படுத்தப்படும் பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 2019–2020ம் ஆண்டு வரை Consent to operation fees ரூ.6,06,640/– தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. தற்போது 2020–2022–ம் நிதியாண்டிற்கு Consent to operation fees ரூ.2,27,600/– தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்து கடித எண் CUD/0464/DEE /TNPCB/CUD/RL/2020 நாள் 06.11.2020ன் மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளது.<br>எனவே, மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 2020–2022 ம் நிதியாண்டிற்கு Consent to operation fees ரூ.2,27,600/–ஐ தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். (2969/ 2020/ இ2) |
| 11) | கடலூர் பெருநகராட்சி புதிய அலுவலக கட்டடத்தில் அலுவலர்களுக்கு போதுமான மேசை நாற்காலி வசதிகள் இல்லாமல் இருப்பதால் அலுவலர்களுக்கு தேவையான மேசை நாற்காலிகள் வாங்கும் பணி ரூ.1,26,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தாராயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2.பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 12) | கடலூர் பெருநகராட்சி புதிய அலுவலக கட்டிட பணி முடிவுற்று சுமார் இரண்டு வருட காலம் ஆவதால், உடனடியாக லிப்ட் இயந்திரத்தினை பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளதால், அதன் தயாரிப்பு நிறுவனம் (Johnson Lifts) மூலம் ஆண்டு பராமரிப்பு செய்திடும் பணி ரூ.65000/– (ரூபாய் அறுபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 13) | கடலூர் பெருநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் அனைத்து வசதிகளுடன் புதிய வரிவசூல் மையம் அமைக்கும் பணி ரூ.4,40,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 14) | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட 45 வார்டுகளிலும் தற்பொழுது பெய்து வரும் கடும் மழை, வெள்ளம் காரணமாக நகரில் டெங்கு நோய் மற்றும் நீரின் மூலம் பரவும் நோய்கள், வராமல் இருக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நநவடிக்கையாக கபசுர குடிநீர் வழங்குதல் மற்றும் சளி, இருமல் மற்றும் காய்ச்சல் குறித்த கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ள பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை கடலூர் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களின் ந.க.எண் 1349/ அ1/ 2019 நாள் 14.03.2019ம் தேதிய கடிதத்தில் டெங்கு கொசுத் தடுப்பு பணியாளர்கள் (Domestic Breading Checkers) தற்காலிகமாக நகராட்சி ஆணையர்கள் மூலமாக பணியமர்த்திட வேண்டி அனுமதி 28.02.2019ம் தேதியில் மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க. எண் 13920/ 2018/ கே2 நாள் 27.06.2018 கடிதத்தில் அரசாணை எண் 62, தொ.ம.வே.வா. துறை நாள் 11.10.2017ல் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சி பகுதிகளில் பணியில் ஈடுபடுத்தப்படும் தினக்கூலி பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்த பட்ச ஊதிய விகிதத்தின்படி கூலித்தொகை வழங்க உரிய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br>இந்நகராட்சியில் பணிபுரியும் DBC பணியாளர்கள் தங்களுக்கு ஊதியம் உயர்வு செய்து வழங்குமாறு கோரி அளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீது ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி நகராட்சி பொறியாளரிடம் குறிப்பு கோரப்பட்டது. நகராட்சிபொறியாளர் அவர்களின் குறிப்பில் அரசாணை எண் 62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 11.10.2017ல் குறிப்பிட்டுள்ள அட்டவணையில் நகராட்சியில் பணிபுரியும் unskilled labours-களுக்கு மாதம் ரூ.10000/– வழங்கலாம் என்ற அரசாணையின்படி ஊதியம் வழங்கலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.<br>எனவே நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி அரசாணை எண் 62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 11.10.2017ல் குறிப்பிட்டுள்ளபடியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படியும், இந்நகராட்சியில் பணிபுரியும் DBC பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.305/– வீதம் ஊதியம்உயர்வு நிர்ணயம் செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

மேலும், டெங்கு கொசு தடுப்பு பணியாளர்களுக்கு நவம்பர் 2020 முதல் பிப்ரவரி 2021 வரை 4 மாதங்களுக்கு ரூ.305/– வீதம் தினக்கூலி அடிப்படையில் அன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழு மூலம் அமர்த்தி பணி செய்யவும், DBC பணியாளர்களுக்கான ஊதியம் அவர்கள் பணிபுரிந்த நாட்களுக்கு வருகை பதிவேட்டின்படி நபர்ஒருவருக்கு ரூ.305/– வீதம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க தோரய செலவினத் தொகை ரூ.45,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு.** அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். **(4218/2018/எச்2)**

**15)** கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவு இலகுரக ஓட்டுநர் பணிக்காக ஒரு வருட காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்திட 1 (ஒன்று) நபர் விநியோகம் செய்யும் பணிக்கு 16.10.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில், பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்பள்ளிகளின் விவரம் கீழ்க்கண்ட விபரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.17 % (ரூ. 2,12,760.00) மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.34 % (ரூ. 2,13,840.00) மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி 0.17 % மதிப்பீட்டை விட குறைவு (ரூ.2,12,760.00) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதியும், மேலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம். **(நக. எண் 5082/ 2018/ இ2)**

**16)** கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவு இலகுரக ஓட்டுநர் பணிக்காக ஒரு வருட காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்திட பணியாளர் 1 (ஒன்று) நபரை பணி அமர்த்திடும் பணிக்கான செலவினம் ரூ.2.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1.மன்றம் அனுமதிக்கலாம்
2.பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 30/11/2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.